## பத்திரிக்கை குறிப்பு

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பூர் பிரிவு அலுவலகத்தை அணுகி, தான் ஒப்பந்த தொழில் தொடங்க ரூ.75,00,000/-க்கான கடனீட்டு சான்றிதழ் வழங்க கோரி திருப்பூர் மாவட்டம் காங்கேயம் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்வதற்கு திருமதி.சிவகாமி, தாசில்தார், காங்கேயம் தாலுகா அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,50,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்டு, பின்னர் அதனை குறைத்து ரூ.60,000/- தர வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 27.01.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.சிவகாமி, தாசில்தார், காங்கேயம் தாலுகா அலுவலகம், திருப்பூர் மாவட்டம், புகார்தாரரிடமிருந்து ரூ.60,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Tiruppur detachment, and gave complaint that he had applied to provide solvency certificate at Kangeyam Taluk Office for the value of Rs.75,00,000/- to start contract business at Tiruppur District, for which Tmt.Sivakami, Tahsildar, Kangeyam Taluk Office, demanded Rs.1,50,000/- as bribe and later reduced it to Rs.60,000/- for processing his application. In this connection a case was registered and a trap was organized today 27.01.2022.

During trap proceedings, the accused Tmt.Sivakami, Tahsildar, Kangeyam Taluk Office, Tiruppur District, reiterated her earlier demand and received the bribe amount of Rs.60,000/- from the complainant. The accused was arrested.